தின கனி
செய்திகள் மற்றும்விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்








| Vol: 02 | Issue: 176 | 4 Pages | 23.1.2025 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 176 | 4 பக்கங்கள் | 23.1.2025 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**செய்யாமற் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்
உய்யா விழுமந் தரும்**

**விளக்கம்:** தான் ஒன்றும் செய்யாதிருக்கத் தனக்குத் தீங்கு செய்தவர்க்கும் துன்பமானாவற்றைச் செய்தால் செய்தபிறகு தப்பமுடியாத துன்பத்தையே கொடுக்கும்.

## ராகுல் காந்தி பேச்சால் ரூ.250 இழப்பு; நஷ்டஈடு கோரி கோர்ட்டில் மனு தாக்கல்



பாட்னா, ஜன.23

பீகாரின் சமஸ்திப்பூர் மாவட்டத்தில் சோனுப்பூர் கிராமத்தில் வசித்து வருபவர் முகேஷ் சவுத்ரி. இவர் ரோஸ்ரா மண்டலத்திற்கு உட்பட்ட உள்ளூர் கோர்ட்டில் மனு ஒன்றை தாக்கல் செய்திருக்கிறார். அதில், நான் 5 லிட்டர் பாலை வாளி ஒன்றில் எடுத்து சென்றேன். ஒரு லிட்டர் பாலின் விலை ரூ.50 ஆகும்.

இந்நிலையில், மக்களவை எதிர்க்கட்சி தலைவர் மற்றும் காங்கிரஸ் முன்னாள் தலைவரான ராகுல் காந்தி, இந்திய இறையாண்மைக்குஅச்சுறுத்தல்ஏற்படுத்தும் வகையில்பேசியபேச்சைகேட்டதும்எனக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. இதனால், பால் வாளி கையில் இருந்து தவறி விழுந்து விட்டது.

இதில், பால் முழுவதும் வீணாகி விட்டது என குறிப்பிட்டு இருக்கிறார். அதனால், ரூ.250 இழப்பீடு தரவேண்டும் என மனுவில் கோரியுள்ளார். இதேபோன்று, புதிய குற்றவியல் சட்டத்தின் கீழ் தேசத்துரோக பிரிவு உள்பட காந்திக்கு எதிராக வழக்கு விசாரணையும் மேற்கொள்ளப்பட வேண்டும் என அவர் கோரியுள்ளார்.

அவருடையமனுபற்றியநகல்ஒன்றையும்சான்றுக்காகஊடகத்தினரிடம் அவர் காண்பித்துள்ளார். எனினும் அவருடைய இந்த மனு கோர்ட்டில் விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது பற்றிய தகவல் எதுவும் வெளிவரவில்லை.

## அதானி மகன் திருமணத்தில் மன்னர் சார்லஸ், போப் பங்கேற்பா... உண்மை என்ன?



உத்தர பிரதேசம், ஜன.23

உத்தர பிரதேசத்தின் பிரயாக்ராஜ் நகரில், 144 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் மகா கும்பமேளாசிறப்பாகநடந்து வருகிறது. இந்நிகழ்ச்சியில், அதானிகுழுமத்தின்தலைவர் கவுதம் அதானி கலந்து கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில், அதானியின்மனைவி பிரீத்தி அதானி, மகன்கள்கரண்மற்றும்ஜீத், மருமகள் பரிதி மற்றும் பேத்தி காவேரி ஆகியோரும் வந்திருந்தனர்.

தினசரி ஒரு லட்சம் இலவச உணவு வழங்குவதற்கு ஆதரவாக அதானி நிதியுதவி செய்து வருகிறார். இதேபோன்று, 1 கோடி இறைவணக்க புத்தகங்களையும் வழங்கி வருகிறார்.

அப்போது அதானியிடம், அவருடைய மகனின் திருமணம் பிரபலங்கள் பங்கு பெறும் கொண்டாட்டங்கள் நிறைந்த மகா கும்பமேளாவாக இருக்க போகின்றதா? என நிருபர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த அதானி, நிச்சயம் இல்லை என மறுத்துள்ளார். அவருடைய மகன் ஜீத்தின் திருமணம் பிப்ரவரி 7ந்தேதி நடைபெறும் என கூறினார். அதானி தொடர்ந்து கூறும்போது, எங்களுடைய நடவடிக்கைகள் எல்லாம் பொதுஜனங்களை போன்றே இருக்கும். ஜீத்தின் திருமணம் மிக எளிமையாக, முழு பாரம்பரிய வழிகளிலேயே இருக்கும் என்றார்.

குஜராத்தின் ஆமதாபாத் நகரில், ஜீத் அதானிக்கும் மற்றும் சூரத் நகரின் பிரபல வைர வியாபாரியான ஜியாமின் ஷாவின் மகளான திவா ஷாவுக்கும் இடையே திருமணம் நடைபெற உள்ளது. இந்நிலையில் சமீப நாட்களாக, சமூக ஊடகத்தில் பல்வேறு செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

உலகளவிலானநட்சத்திரங்கள்மற்றும்பிரபலங்கள், இந்ததிருமணத்தில் கலந்து கொள்வார்கள் என தகவல் பரவின. திருமண விருந்தினர்களாக எலான் மஸ்க், பில் கேட்ஸ், மார்க் ஜுக்கர்பர்க், டேனியல் கிரெய்க், டெய்லர் ஸ்விப்ட், ஜஸ்டின் பீபர், கன்யே வெஸ்ட், கர்தேஷியன் சகோதரிகள், ரபேல் நடால், தில்ஜித் தோசன்ஜ், சுந்தர் பிச்சை, சத்யா நாதெள்ளா, பில்லி எலிஷ், கோல்ட்ப்ளே மற்றும் கிங் சார்லஸ் மற்றும் போப் கூட கலந்து கொள்வார்கள் என செய்திகள் பரவின.

இந்தியா மற்றும் இங்கிலாந்து இடையேயான ஒரு நாள் போட்டி கூட திருமண நிகழ்வுக்காக, மோதேரா ஸ்டேடியத்தில் இருந்து மாற்றி வைக்கப்பட்டு உள்ளது. இதில், ஆயிரம் சூப்பர்கார்கள், நூற்றுக்கணக்கான தனியார் விமானங்கள் மற்றும் 58 நாடுகளை சேர்ந்த சமையல் கலை நிபுணர்கள் என ரூ.10 ஆயிரம் கோடி வரை செலவிடப்படும் என தெரிவிக்கப்பட்டு இருந்தது. இந்த சூழலில், இந்த செய்திகளுக்கு எல்லாம் மறுப்பு தெரிவிக்கும் வகையில் அதானியின் பதில் அமைந்துள்ளது.

## பீகார்: எக்ஸ்பிரஸ் ரெயிலில் துப்பாக்கி சூடு; பயணி பலி



லகிசராய், ஜன.23

மேற்கு வங்காளத்தின் ஹவுராவில் இருந்துகயாநோக்கி எக்ஸ்பிரஸ் ரெயில் ஒன்று இன்று மாலை சென்று கொண்டிருந்தது. அந்த ரெயில், பீகாரின் லகிசராய் மாவட்டத்தில் உள்ள கியுல் ரெயில்வே சந்திப்பை நோக்கி சென்றது. அப்போது, ரெயிலில் பயணித்த மர்மநபர்கள்திடீரென எழுந்து, மற்றொரு பயணியை துப்பாக்கியால் சுட்டனர்.

இதில், படுகாயமடைந்த அந்த பயணி சம்பவ இடத்திலேயே பலியானர். இதனை தொடர்ந்து துப்பாக்கி சூடு நடத்திய நபர்கள் ரெயிலில் இருந்து கீழே குதித்து தப்பி விட்டனர்.

இதுபற்றி ரெயில்வே போலீஸ் சூப்பிரெண்டு (ஜமல்பூர்) ராமன் சவுத்ரி தலைமையிலான போலீசார் விசாரணை நடத்தினர். இதில், பலியான பயணி தர்மேந்திர குமார் (வயது 49) என்பதும் அவர் லகிசராயில் வசித்து வந்தவர் என்றும் தெரிய வந்தது.

அவருடைய உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்து, போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள். தர்மேந்திராவின் பையில் சொத்து தொடர்பான ஆவணங்கள் இருந்தன. இதனால், இந்த தாக்குதலுக்கு சொத்து விவகாரம் ஒரு காரணமா? அல்லது வேறு ஏதேனும் தனிப்பட்ட விரோதம் உண்டா? என பல்வேறு கோணங்களில் விசாரணை நடந்து வருகிறது.

# காரைக்குடி அரசு ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆய்வு

சிவகங்கை, ஜன.23

சிவகங்கை மாவட்டம் காரைக் குடி, முடியரசன் சாலையிலுள்ள அரசு ஆதிதிராவிடர் நல மாணவி யர் விடுதியில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார். அப்போது அங்கு தங்கி யுள்ள 62 பள்ளி மாணவிகளிடம் விடுதியில் வழங்கப்படும் உண வின் தரம் குறித்தும், விடுதியில் உள்ள வசதிகள் குறித்தும், அவர்க ளின் தேவைகள் குறித்தும் கேட்ட றிந்தார். மேலும், அம்மாணவி களை நன்றாக படித்து, வாழ்வில் சிறப்பான நிலையினை அடைய வேண்டும் என்று முதல்அமைச்சர் வாழ்த்தினார்.



அதனைத்தொடர்ந்து,விடுதியில் உள்ள சமையல் கூடம், உணவுக் கூடம், இருப்பு அறை ஆகிய வற்றை முதல்அமைச்சர் பார்வை யிட்டு ஆய்வு செய்தார். மாணவிக ளுக்கு இரவு உணவாக வழங்குவதற்காக தயாரிக்கப்பட்ட இட்லி, சாம்பார், சட்னி ஆகிய வற்றை ருசித்து பார்த்து அதன் தரத் தினை ஆய்வு செய்தார். பின்னர், விடுதி அலுவலர்களிடம், மாண விகளுக்கு தரமான மற்றும் சத்தான உணவினை குறித்த நேரத்தில் தவ றாமல் வழங்கிட வேண்டும் என் றும், அவர்களுக்கு தேவையான வசதிகளை செய்து தர வேண்டும் என்றும் முதல்அமைச்சர் அறிவு றுத்தினார்.

மேலும், மாலை நேரங்களில் மாணவிகளுக்கு விடுதி காப்பாளர் கள் பாடங்கள் கற்றுத் தருவது பாராட்டுக்குரியது என்றும், பள்ளி பாடத்துடன் பொது அறிவு தகவல் களையும் மாணவிகளுக்கு கற்பிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தி னார். இந்த ஆய்வின்போது, கூட் டுறவுத்துறை அமைச்சர் பெரியக ருப்பன், உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன், சிவ கங்கை மாவட்ட கலெக்டர் ஆஷா அஜித் மற்றும் அரசு உயர் அலுவ லர்கள் உடனிருந்தனர்.

## சமூக ஆர்வலர் ஜகபர் அலி கொலை வழக்கு சிபிசிஐடிக்கு மாற்றம்

புதுக்கோட்டை, ஜன.23

புதுக்கோட்டையில் சமூக ஆர்வ லர் ஜகபர் அலி கொலை செய்யப் பட்ட வழக்கு சிபிசிஐடி விசார ணைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. சட்டவிரோத கல்குவாரிக்கு எதிராக போராடிய ஜகபர் அலி கடந்த 2 தினங்களுக்கு முன் லாரி ஏற்றி கொலை செய்யப் பட்டார். இந்த கொலை தொடர்பாக குவாரி உரிமையாளர், அவரது மகன் உள்ளிட்ட 4 பேர் கைது செய்யப்பட் டுள்ளனர்.


வழக்கின் முழுவிவரம்:

புதுக்கோட்டை மாவட்டம் திரும யம் அருகே வெங்களூர் கிராமத்தை சேர்ந்தவர் ஜகபர் அலி (வயது58). இவர் முன்னாள் அ.தி.மு.க. ஒன்றிய கவுன்சிலராகவும், திருமயம் தெற்கு ஒன்றிய அ.தி.மு.க. சிறுபான்மையினர் நலப்பிரிவு செய லாளராகவும், தமிழ்நாடு அமெச்சூர் கபடி கழக மாவட்ட செயலாளராக வும் இருந்துள்ளார். மேலும் இவர் சமூக ஆர்வலராக செயல்பட்டு திரு மயம் பகுதியில் இயங்கும் கல்குவா ரிகளுக்கு எதிராக புகார்கள் தெரிவித் தும், மக்களை திரட்டி போராட்டமும் நடத்தியவர்.

மதுரை ஐகோர்ட்டில் வழக்கும் தொடர்ந்திருக்கிறார். இந்த நிலை யில் கடந்த 17ந் தேதி ஜகபர் அலி, அவரது கிராமத்தின் அருகே காட் டுபாவா பள்ளிவாசலில் தொழுகை முடித்து விட்டு ஸ்கூட் டரில் வந்தபோது சாலையில் எதிரே வந்த மினி லாரி மோதி யது. இதில் அவர் சம்பவ இடத்தி லேயே பரிதாபமாக உயிரிழந்தார். அவரது உடல் திருமயம் அரசு மருத் துவமனையில் பிரேத பரிசோத னைக்கு பின் உறவினர்களிடம் ஒப் படைக்கப்பட்டது.

இந்த நிலையில் ஜகபர் அலியின் சாவில் சந்தேகம் இருப்பதாகவும், கல் குவாரிகளுக்கு எதிராக புகார் தெரிவித்து வந்ததில், அவரை கல் குவாரி உரிமையாளர்கள் ஆத்திரத் தில் திட்டமிட்டு கொலை செய்தி ருக்கலாம் என, கல் குவாரி உரிமை யாளர்களின் பெயர் மற்றும் லாரி உரிமையாளரின் பெயர்களை குறிப் பிட்டு ஜகபர் அலியின் 2வது மனைவி மரியம் (37) திருமயம்





போலீஸ் நிலையத்தில் புகார் அளித் தார். அதன்போில் போலீசார் சந் தேக மரண வழக்காக பதிவு செய்து விசாரித்தனர்.

இதற்கிடையில் ஸ்கூட்டர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாக மினி லாரியின் உரிமையாளரான திருமயத்தை சேர்ந்த முருகானந்தம் (56)திருமயம்போலீஸ்நிலையத்தில் சரண்அடைந்தார். அவாிடம்போலீ சார் விசாரணை நடத்தியதில் நடந் தது விபத்து அல்ல, கல்குவாரி உரி மையாளர்களின் ஏற்பாட்டில் ஜகபர் அலியை திட்டமிட்டு கொலை செய் தது தெரிந்தது. இதையடுத்து இந்த வழக்கை கொலை வழக்காக மாற்றி பதிவு செய்தனர்.

போலீசாரின் புலன்விசாரணையில் மினி லாரியை ஓட்டி வந்தது ராமநாதபுரத்தை சேர்ந்த காசிநாதன் (45) என்பதும், கல் குவாரி உரிமையாளரான திரும யம் அருகே பாப்பாத்தி ஊரணியை சேர்ந்த ராசு (54), அவரது மகன் தினேஷ் (28), மற்றொரு கல்குவாரி உரிமையாளரான ராமையா ஆகி யோர்திட்டமிட்டுஇந்தகொலையை அரங்கேற்றியது தெரியவந்தது. இதைத்தொடர்ந்து மினி லாரி உரி மையாளர் முருகானந்தம், டிரைவர் காசிநாதன், கல் குவாரி உரிமையா ளர் ராசு, அவரது மகன் தினேஷ் ஆகிய 4 பேரையும் போலீசார் கைது செய்தனர். ராமையா தலைமறைவா கினார்.

இதற்கிடையில் கைதான 4 பேரை யும் திருமயம் கோர்ட்டில் நீதிபதி கோபால கண்ணன் முன்பு போலீ சார் நேற்று ஆஜர்படுத்தினர். இதை யடுத்து கைதான 4 பேரையும் 15 நாள் காவலில் வருகிற 3ந் தேதி வரை சிறையில் அடைக்க நீதிபதி உத்தரவிட்டார். அதன்படி 4 பேரும் சிறையில் அடைக்கப்பட்டனர்.

## வாளுக்கு வேலி அம்பலம் சிலைக்கு அமைச்சர் சாமிநாதன் மாலை அணிவித்து மரியாதை

சென்னை, ஜன.23

சிவகங்கையில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் காணொலி வாயிலாக, சுதந்திர போராட்ட வீரர் வாளுக்கு வேலி அம்பலத்தின் திரு உருவச்சி லையினை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். இதனை முன்னிட்டு, நகரம்பட்டி யில் செய்தி மக்கள் தொடர்புத்துறை யின் சார்பில் நிறுவப்பட்டுள்ள வீரர் வாளுக்கு வேலி அம்பலத்தின் திரு உருவச்சிலைக்கு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் மாலை அணி வித்து மரியாதை செலுத்தினார்.

அதன்பின்னர் அமைச்சர் மு. பெ.சாமிநாதன் செய்தியாளர்கள் சந் திப்பில் கூறியதாவது:

சுதந்திரப் போராட்டத் தியாகி களை போற்றிடும் வகையிலும், அவர்களை கவுரவிக்கும் பொருட் டும், முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின்சிறப்பானநடவடிக் கைகளை மேற்கொண்டு வருகிறார் கள்.

அதனடிப்படையில், சுதந்திரப் போராட்டத்தில்தனது பங்களிப்பை யும், தியாகத்தையும் முழுமையாக அளித்த சுதந்திரப் போராட்ட வீரர் வாளுக்கு வேலி அம்பலம் அவர்க ளின் புகழை உலகிற்கு பறைசாற்று கின்ற வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் தன் பொன்மொழிகளால் வரலாற்று சிறப்புக்களை நூல்களாக பொறித்துள்ளார்.

முத்தமிழறிஞர்கலைஞர்வழியில் தமிழகத்தில் சிறப்பான ஆட்சி யினை நடத்திக்கொண்டிருக்கும், முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின், வாளுக்கு வேலி அம்பலம் அவர்க ளின் புகழிற்கு வலுச்சேர்க்கின்ற வகையில், அன்னாரது பிறந்த நாளினை அரசு விழாவாக கொண் டாடிட உத்தரவிட்டதன் அடிப்ப டையில், கடந்த இரண்டு ஆண்டுகளாக அன்னாரது பிறந்தநாள், அரசு விழாவாக சிறப்பாக கொண்டாடப் பட்டு வருகிறது.

மேலும், வாளுக்கு வேலி அம்பலம் அவர்களுக்கு சிறப்பு சேர்த்திடும் வகை யில், அன்னாருக்கு ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் நகரம்பட்டியில் திருஉ ருவச்சிலை அமைக்கப்பதற்கென முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கடந்த22.01.2024அன்றுகாணொலி காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டப் பட்டு, அப்பணிகள் இனிதே நிறை வுற்று, வாளுக்கு வேலி அம்பலம் அவர்களின் திருவுருவச்சிலை இன் றையதினம் வரலாற்று சிறப்புமிக்க சிவகங்கை மாவட்டத்திலேயே நேரில் வருகை புரிந்து கலந்து கொண்ட அரசு நிகழ்ச்சியில் காணொலி காட்சி வாயிலாக திறந்து



வைக்கப்பட்டுள்ளது.

மொழி, இனம், சுதந்திரம் ஆகிய வற்றிற்கு முக்கியத்துவம் அளித்து, அதற்கென பாடுபட்டவர்களை கௌரவிக்கின்ற வகையிலும், அவர் களின் புகழை போற்றுகின்ற வகை யிலும், அவர்களுக்கு நினைவ கங் கள், நினைவுச்சின்னங்கள் மற்றும் திருவுருவச்சிலைகள் ஆகியவை களை அமைத்து, எதிர்கால சந்ததியி னர்கள் அறிந்து கொள்கின்ற வகை யில், சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

## தைப்பூசத்தை முன்னிட்டு மதுரை - பழனி சிறப்பு ரெயில்கள்

மதுரை, ஜன.23

பழனி தண்டாயுதபாணி கோவில் தைப்பூசத் திருவிழாவை முன்னிட்டு பயணிகள் வசதிக்காக மதுரை, பழனி இடையே சிறப்பு ரெயில் இயக்கப்பட உள்ளதாக தெற்கு ரெயில்வே தெரிவித்துள்ளது. இதன்படி மதுரை, பழனி இடையே பிப்ரவரி 11022025 ( செவ்வாய்) மற்றும் 12022025 (புதன்கிழமை) ஆகிய நாட்களில் சிறப்பு ரெயில் இயக்கப்பட உள்ளது. மதுரை பழனி இடையே தைப்பூசசிறப்பு ரெயில் (06722) குறிப்பிட்ட இரு நாட்களிலும் மதுரையிலிருந்து காலை 8.45 மணிக்கு புறப்பட்டு காலை 11.30 மணிக்கு பழனி சென்று சேரும். மறு மார்க்கத்தில் பழனி – மதுரை தைப்பூச சிறப்பு ரெயில் (06721) பழனியில் இருந்து மாலை 3.00 மணிக்கு புறப்படுகிறது.. இந்த சிறப்பு ரயில்கள் சோழவந்தான், கொடைக்கானல் ரோடு, அம்பாத்துரை, திண்டுக்கல், ஒட்டன்சத்திரம் ஆகிய ரெயில் நிலையங்களில் நின்று செல்லும் என்றும் முற்றிலும் முன்பதிவில்லா 16 பெட்டிகளுடன் இயக்கப்படுகின்றன என்றும் தெற்கு ரெயில்வே மதுரை கோட்டம் அறிவித்துள்ளது.

# மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில் கைதான ஞானசேகரன் மருத்துவமனையில் அனுமதி

சென்னை, ஜன.23

சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் கடந்த மாதம் 23ந் தேதி மாணவி ஒருவர் பாலியல் வன்கொடுமைக்கு ஆளானார். இந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. பாதிக்கப்பட்ட மாணவி அளித்த புகாரின் அடிப்படையில் கோட்டூர்புரம் போலீசார் வழக்குப்பதிவு செய்து கோட்டூர்புரத்தை சேர்ந்த ஞானசேகரன் என்பவரை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இந்த வழக்கை தாமாக முன்வந்து விசாரித்த ஐகோர்ட்டு, வழக்கை விசாரிக்க 3 பெண் அதிகாரிகள் கொண்ட சிறப்பு குழுவை அறிவித்தது. அண்ணாநகர் துணை கமிஷனர் சிநேக பிரியா தலைமையிலான 3 பெண் ஐ.பி.எஸ். அதிகாரிகளை கொண்ட சிறப்பு புலனாய்வு குழு அமைக்கப்பட்டது. இந்த சிறப்பு புலனாய்வு குழு போலீசார், அண்ணா பல்கலைக்கழக பாலியல் வன்கொடுமை வழக்கு தொடர்பாக கோட்டூர்புரம் போலீசாரிடம் இருந்த கோப்புகளை பெற்று விசாரணையை தொடங்கினர்.

முதற்கட்டமாக சிறையில் உள்ள ஞானசேகரனின் வீடு மற்றும் சம்பவம் நடந்த அண்ணா பல்கலைக்கழக வளாகம் உள்ளிட்ட இடங்களில் சோதனை மேற்கொண்டனர். சோதனையில் ஞானசேகரன் சம்பவத்தன்று பயன்படுத்திய உடைமைகள் உள்ளிட்டவற்றை கைப்பற்றினர். மேலும் வீட்டு ஆவணங்கள் சிலவற்றையும் கைப்பற்றப்பட்டு சோதனைக்கு உட்படுத்தினர். கைதான ஞானசேகரனிடம் சோதனையில் கைப்பற்றப்பட்ட பொருட்கள், முக்கிய ஆவணங்கள் குறித்து விசாரிப்பதற்காக சிறப்பு புலனாய்வு குழு அவரை போலீஸ் காவலில் எடுத்து விசாரிக்க முடிவு செய்து இருந்தனர்.

இது தொடர்பாக சைதாப்பேட்டை 9வது கோர்ட்டில் ஞானசேகரனை 7 நாள் போலீஸ் காவலில் எடுத்து விசாரிக்க அனுமதி கேட்டு மனு தாக்கல் செய்தனர். இந்த மனு மீதான விசாரணை சைதாப்பேட்டை பெருநகர 9வது கோர்ட்டில் மாஜிஸ்திரேட்டு சுப்பிரமணியன் முன் வந்தது. அப்போது சிறப்பு புலனாய்வு குழு போலீசார் சிறையில் இருந்த ஞானசேகரனை கோர்ட்டில் ஆஜர்படுத்த அழைத்து வந்தனர்.



ஞானசேகரனிடம் மாஜிஸ்திரேட்டு விசாரணை நடத்தினார். பின்னர் சிறப்பு புலனாய்வு குழு கோரிய 7 நாள் போலீஸ் காவலில் விசாரிக்க அனுமதி வழங்கி மாஜிஸ்திரேட்டு உத்தரவிட்டார். இதையடுத்து ஞானசேகரனிடம் விசாரணை நடத்த சிறப்பு புலனாய்வு குழு போலீசார் அழைத்து சென்றனர்.

இதனைத்தொடர்ந்து காவலில் எடுக்கப்பட்டுள்ள ஞானசேகரனிடம் நேற்று முன் தினம் இரவு எழும்பூர் காவல் நிலையத்தில் வைத்து விடிய விடிய விசாரணை நடைபெற்றது. விசாரணைக்கு பின் நேற்று அதிகாலையில் அண்ணா நகர் துணை ஆணையர் அலுவலகத்திற்கு ஞானசேகரன் அழைத்து செல்லப்பட்டார். அங்கு அண்ணா நகர் துணை ஆணையர் சினேக பிரியா தலைமையிலான சிறப்பு புலனாய்வு குழு ஞானசேகரனிடம் விசாரணை நடத்தி வந்தது.

இந்நிலையில் மாணவி வன்கொடுமை வழக்கில் கைதான ஞானசேகரன் தற்போது ஸ்டான்லி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. போலீஸ் விசாரணையில் உள்ள ஞானசேகரனுக்கு அதிகாலையில் வலிப்பு ஏற்பட்ட நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழக காவல் துறையில் 28 எஸ்.பி.க்களுக்கு ஐ.பி.எஸ். அந்தஸ்து

சென்னை, ஜன.23

தமிழக காவல் துறையில் எஸ்.பி.யாக பணியாற்றும் 28 அதிகாரிகளுக்குஐ.பி.எஸ்.அந்தஸ்து வழங்கி ஏற்கனவே தமிழக அரசு அறிவிப்பு வெளிட்டிருந்தது.

இந்நிலையில் அந்த 28 எஸ்.பி.களுக்கும் ஐ.பி.எஸ். அந்தஸ்து வழங்கிய தற்கான ஆணையை மத்திய அரசு நேற்று வெளியிட்டது.

இதுதொடர்பான அந்த ஆணையில் ஈஸ்வரன், மணி, செல்வக்குமார், டாக்டர் சுதாகர், எஸ்.ஆர். செந்தில்குமார், முத்தரசி, பரோஸ்கான் அப்துல்லா, ராமகிருஷ்ணன், சக்திவேல், நாகஜோதி, சுகுமாரன், ராஜராஜன், விமலா, சுரேஷ்குமார், பாஸ்கரன், சண்முக பிரியா, ஜெயக்குமார், மயில்வாகணன், ஜெயலட்சுமி, சுந்தர வடிவேல், உமையாள், எஸ். சரவணன், டி.செந்தில்குமார், மகேந்திரன், சுப்புலட்சுமி, ராஜன், செல்வராஜ், ஸ்டாலின் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

தமிழகத்தில் குரூப் 1 மூலம் டி.எஸ்.பி.க்களாக பணியில் சேருகிறவர்கள் பதவி மூப்பு அடிப்படையில் எஸ்.பி.க்களாக பணியாற்றும்போது அவர்களுக்கு குறிப்பிட்ட ஆண்டுகளில் ஐ.பி.எஸ். அந்தஸ்து வழங்கப்படும். ஒவ்வோர் ஆண்டும் மாநிலங்களுக்கு யு.பி.எஸ்.சி. மூலம் தேர்வாகி ஐ.பி.எஸ். அதிகாரிகளாக நியமிக்கப்படுகிறவர்களைப் போல, ஒவ்வொரு ஆண்டும் தமிழக அதிகாரிகளுக்கும் ஐ.பி.எஸ். அந்தஸ்து வழங்கப்படுகிறது.

# டிஐஜி வருண்குமார் தொடர்ந்த வழக்கு பிப்.19ல் சீமான் நேரில் ஆஜராக வேண்டும்: திருச்சி நீதிமன்றம் உத்தரவு

திருச்சி, ஜன.23

திருச்சி டிஐஜி வருண்குமார் தொடர்ந்த வழக்கு சம்பந்தமாக சீமான் வரும் பிப்.19ம் தேதி நீதிமன்றத்தில் நேரில் ஆஜராக வேண்டும் என திருச்சி நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது. திருச்சி டிஐஜி வருண்குமார், நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் மீது மான நஷ்ட வழக்கு தொடர்ந்து இருந்தார். இதுகுறித்து ஜன.7ம் தேதி வருண்குமார் தரப்பு சாட்சிகள் இரண்டு பேர் கோர்ட்டில் ஆஜராகி தங்கள் தரப்பு வாக்குமூலத்தை பதிவு செய்தனர்.



இந்நிலையில் நேற்று நடந்த வழக்கு விசாரணையில், புதுக்கோட்டை மாவட்டம் கணேஷ்நகரை சேர்ந்த சுயதொழில் செய்து வரும் மணிகண்டன் (36) ஆஜராகி, வருண்குமார் தரப்பின் மேலும் ஒரு சாட்சியாக சாட்சியம் அளித்தார்.

இந்த வழக்கின் புகார்தாரர் தரப்பிலான விசாரணைகள் முடிந்த நிலையில், கோர்ட் எண்.4 மாஜிஸ்திரேட் (பொ) பாலாஜி, வரும் பிப்.19ம் தேதி, சீமான் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராக வேண்டும் என உத்தரவிட்டார். மேலும் சீமான் தரப்பில் சீமானே நேரில் ஆஜராக வேண்டும். அவர் சார்பில் வக்கீல் ஆஜராக கூடாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# சவுக்கு தோப்பில் வைத்து 16 வயது சிறுமி பாலியல் பலாத்காரம்: 2 வாலிபர்கள் கைது

தஞ்சாவூர், ஜன.23

தஞ்சை மாவட்டம் அதிராம்பட்டினம் அருகே உள்ள ஒரு ஊரை சேர்ந்த 16 வயது சிறுமி கீழத்தோட்டம் கிராமத்தில் உள்ள தனது தோழியை சந்திக்க சென்றுள்ளார்.

அப்போது அதே பகுதியை சேர்ந்த கண்ணன் என்பவரின் மகன் அரவிந்த் என்பவருடன் சிறுமிக்கு பழக்கம் ஏற்பட்டதாக தெரிகிறது. இதனையடுத்து இருவரும் செல்போன் மூலம் அடிக்கடி தொடர்பில் இருந்துள்ளனர்.

இந்த நிலையில் அந்த பெண்ணிடம் பேசிய அரவிந்த், தனிமையில் சந்திக்க சிறுமியை அழைத்துள்ளார்.

அதை நம்பி அரவிந்தை சந்திப்பதற்காக ராஜாமடம் சவுக்கு தோப்பு பகுதிக்கு சிறுமி தனியாக சென்றுள்ளார். அங்கு வைத்து அத்துமீறியதுடன் சிறுமியை, அரவிந்த் பாலியல் பலாத்காரம் செய்ததாக கூறப்படுகிறது.

அவர் மட்டுமல்லாது அவருடன் வந்த அரவிந்தின் நண்பனும், கீழத்தோட்டம் பகுதியை சேர்ந்த சக்திவேலின் மகனுமான சரண் என்பவரும் அந்த சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்ததாக தெரிகிறது.

இதனால் அந்த சிறுமி கதறி அழுத நிலையில் சிறுமியின் அலறல் சத்தம் கேட்டு அந்த பகுதியில் இருந்த பொதுமக்கள் அங்கு சென்று பார்த்துள்ளனர். பொதுமக்கள் வருவதை பார்த்தவுடன் இருவரும் அங்கிருந்து தப்பி யோடி விட்டனர். இதுகுறித்து பட்டுக்கோட்டை அனைத்து மகளிர் போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து இதுகுறித்து வழக்குப்பதிவு செய்த பட்டுக்கோட்டை அனைத்து மகளிர் போலீஸ் இன்ஸ்பெக்டர் கன்னிகா தலைமையிலான போலீசார், தப்பியோடிய அரவிந்த் மற்றும் சரண் ஆகியோர் மீதும் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து கைது செய்து பட்டுக்கோட்டை கோர்ட்டில் ஆஜர்படுத்தினர். இதனைத்தொடர்ந்து நீதிமன்ற உத்தரவின்பேரில் இருவரும் சிறையில் அடைக்கப்பட்டனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# தமிழக போலீஸ் துறையில் 28 போலீஸ் சூப்பிரண்டுகளுக்கு ஐ.பி.எஸ். அந்தஸ்து

சென்னை, ஜன.23

தமிழக போலீஸ் துறையில் சூப்பிரண்டுகளாக பணியாற்றும் 28 பேருக்கு ஐ.பி.எஸ். அந்தஸ்து வழங்கி ஏற்கனவே தமிழக அரசு அறிவிப்பு வெளிட்டது. தற்போது அந்த 28 போலீஸ் சூப்பிரண்டுகளு க்கும் ஐ.பி.எஸ். அந்தஸ்து வழங்கிய தற்கான ஆணையை மத்திய அரசு வெளியிட்டது. அந்த ஆணையில் ஈஸ்வரன், மணி, செல்வக்குமார், டாக்டர் சுதாகர், எஸ்.ஆர்.செந்தில்குமார், முத்தரசி, பரோஸ்கான் அப்துல்லா, ராமகிருஷ்ணன், சக்திவேல், நாகஜோதி, சுகுமாரன், ராஜராஜன், விமலா, சுரேஷ்குமார், பாஸ்கரன், சண்முக பிரியா, ஜெயக்குமார், மயில்வாகணன், ஜெயலட்சுமி, சுந்தர வடிவேல், உமையாள், எஸ்.சரவணன், டி.செந்தில்குமார், மகேந்திரன், சுப்புலட்சுமி, ராஜன், செல்வராஜ், ஸ்டாலின் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

# ஒரே நேர்க்கோட்டில் 6 கோள்கள்... வானில் தெரியப்போகும் அரிய நிகழ்வு



சென்னை, ஜன.23

நமதுசூரியகுடும்பத்தில் பூமி உள்பட அனைத்து கிரகங்களும் வெவ்வேறு சுற்றுவட்டப் பாதைகளில், வெவ்வேறு சுற்றுப்பாதை வேகத்துடன் சூரியனை சுற்றி வருகின்றன. இவ்வாறு சுற்றி வரும் கிரகங்களை நாம் பூமியில் இருந்து சில சமயங்களில் ஒரே நேர்க்கோட்டில் காணக்கூடிய வாய்ப்பு மிகவும் அரிதாக அமைகிறது.

பொதுவாக 3 அல்லது 4 கோள்களை ஒரே நேர்கோட்டில் காணக்கூடிய வாய்ப்பு ஏற்படும். ஆனால், 6 கோள்கள் ஒரே நேர்க்கோட்டில் அணிவகுத்து வரும் அபூர்வ நிகழ்வானது தற்போது அரங்கேறி வருகிறது. அதாவது, வெள்ளி, வியாழன், சனி, செவ்வாய், நெப்டியூன் மற்றும் யுரேனஸ் ஆகிய கோள்கள் ஒரே நேர்க்கோட்டில் தென்பட்டு வருகின்றன.

இவற்றை காண்பதற்காக அறிவியல் அமைப்புகள் சார்பில் நாடு முழுவதும் சிறப்பு ஏற்பாடுகள் நாளை முதல் வருகிற 25 ந்தேதி (சனிக்கிழமை) வரை மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. இதில் வெள்ளி, வியாழன், சனி மற்றும் செவ்வாய் கோள்களை வெறும் கண்களாலும், நெப்டியூன் மற்றும் யுரேனஸ் கோள்களை மிகவும் சக்தி வாய்ந்த தொலைநோக்கிகளாலும் காண முடியும்.

இந்நிகழ்வை பொதுமக்கள் பார்வையிடுவதற்காக சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள பிர்லா கோளரங்கத்தில் வருகிற 25ம் தேதி வரை தினமும் மாலை 6 முதல் இரவு 8 மணி வரை தொலைநோக்கி மூலமாக பொதுமக்கள் கண்டுகளிக்கலாம். இது கண்ணுக்கு விருந்தாக அமையும் என்பது வானியல் ஆர்வலர்களின் எதிர்பார்ப்பாக இருக்கிறது. இதுபோன்ற 5 அல்லது 6 கோள்களின் அணிவகுப்பு மீண்டும் அடுத்த மாதம் (பிப்ரவரி) 28, ஆகஸ்டு 29 ஆகிய நாட்களிலும் நடைபெறும். அடுத்த மாத நிகழ்வில் சந்திரனும் ஒரே வரிசையில் தென்படும் என வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

# ராணிப்பேட்டையில் அமைய உள்ள லேண்ட் ரோவர் கார் உற்பத்தி ஆலைக்கு சுற்றுச்சூழல் அனுமதி

சென்னை: ஜன.23

இந்தியாவில் பிரீமியம் வகை கார்கள் பெரும்பாலும் வெளிநாடுகளில் இருந்தே இறக்குமதி செய்யப்படும் நிலையில், தமிழ்நாட்டிலேயே ஜாகுவார் லேண்ட்ரோவர் காரை டாடா மோட்டார்ஸ் நிறுவனம் உற்பத்தி செய்ய முடிவு செய்துள்ளது. இதற்காக ராணிப்பேட்டையில் இடம் தேர்வு செய்யப்பட்டு 190 ஹெக்டேர் பரப்பளவில் தொழிற்சாலையை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.



இது தொடர்பாக ராணிப்பேட்டையில் உள்ள பணப்பாக்கம் சிப்காட் தொழில்பூங்காவில் டாடா மோட்டார்ஸ் நிறுவனம் 5 ஆண்டுகளில் ரூ.9 ஆயிரம் கோடி முதலீடு மற்றும் 5 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் கார் தொழிற்சாலையை அமைக்க ஏற்கனவே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இப்போது முதல்கட்டமாக ரூ.914 கோடியில் தொழிற்சாலைக்கான கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இங்கு ஜாகுவார் லேண்ட்ரோவர் வகை கார்களை உற்பத்தி செய்வதற்கு டாடா மோட்டார்ஸ் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இந்த ஆலைக்கு கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 28ந் தேதி முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டி இருந்தார். இதைத் தொடர்ந்து கட்டுமான பணிகளை மேற்கொள்ள சுற்றுச்சூழல் அனுமதி கோரி டாடா மோட்டார்ஸ் நிறுவனம் விண்ணப்பித்தது.

இந்தநிலையில், ராணிப்பேட்டையில் அமைய உள்ள டாடா நிறுவனத்தின் ஜாகுவார் லேண்ட் ரோவர் கார் உற்பத்தி ஆலைக்கு தமிழ்நாடு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் சுற்றுச்சூழல் அனுமதி வழங்கியுள்ளது. முதல் கட்டமாக 914 கோடியில் தொழிற்சாலை அமைய உள்ளது. 190 ஹெக்டேரில் அமைய உள்ள இந்த தொழிற்சாலை மூலம் முதல் கட்டமாக 1,650 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய ஆலையில் ஆண்டு உற்பத்தி திறன் 2.5 லட்சம் யூனிட்டுகளுக்கு மேல் இருக்கும் என்றும், அடுத்த 5 முதல் 7 ஆண்டுகளில் உற்பத்தி இலக்கும் அதிகரிக்கும் எனவும் கூறப்பட்டுள்ளது. இந்த புதிய ஆலை அடுத்ததலைமுறை சொகுசு பிரீமிம் கார்கள் மற்றும் புதிய மின்சார வாகனங்களின் உற்பத்திக்கான மையமாக செயல்படும் என்றும் டாடா மோட்டார்ஸ் நிறுவனம் தரப்பில் கூறப்பட்டுள்ளது.


# கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை அருகே மலையில் பற்றி எரிந்த தீ



கன்னியாகுமரி, ஜன.23

கன்னியாகுமரி மாவட்டம் இரணியல் அருகே தோட்டியோடு பகுதியில் உள்ள மலையில் உள்ள காட்டு மரங்கள் இன்று திடீரென தீப்பற்றி எரியத் தொடங்கின. மலை உச்சி வரை தீ மளமளவென பரவியதால் நாகர்கோவில் திருவனந்தபுரம் தேசிய நெடுஞ்சாலையில்பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இதையடுத்து வனத்துறையினர் மற்றும் தீயணைப்பு துறையினர் விரைந்து வந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். மலையில் ஆடு, மாடு மேய்க்க செல்பவர்கள் தீ வைத்தார்களா? அல்லது வேறு ஏதேனும் காரணமா? என்பது குறித்து இரணியல் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மேட்டூர் அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு குறைப்பு



மேட்டூர், ஜன.23

மேட்டூர் அணை கடந்த ஆண்டு 3வது முறை நிரம்பியது. குறிப்பாக ஆண்டின் கடைசிநாளில் அணை 3வது முறையாக நிரம்பியதை அடுத்து காவிரி டெல்டா பாசனத்திற்கு திறக்கப்படும் தண்ணீரின் அளவானது கடந்த 1ந் தேதி முதல் படிப்படியாக அதிகரிக்கப்பட்டு வந்தது. நேற்று முன்தினம் வரை வினாடிக்கு 5 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டு வந்தது. தற்போது பாசனப்பகுதியில் தண்ணீர் தேவை குறைந்து உள்ளது.

இதை கருத்தில் கொண்டு நேற்று காலை முதல் காவிரி டெல்டா பாசனத்துக்கு திறக்கப்படும் தண்ணீரின் அளவு வினாடிக்கு 4 ஆயிரம் கனஅடியாக குறைக்கப்பட்டது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் நேற்றுகாலைநிலவரப்படி 112.40 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 321 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணைக்கு வரும் நீரின் அளவை விட திறக்கப்படும் தண்ணீரின் அளவு அதிகமாக உள்ளதால்நீர்மட்டம்தொடர்ந்து குறைந்து வருவது குறிப்பிடத்தக்கது.

# நீலகிரி: சாலையில் உலா வரும் புலியால் பொதுமக்கள் பீதி

ஊட்டி, ஜன.23

நீலகிரி மாவட்டம் மஞ்சூர் அருகே குந்தா நீர் மின் நிலையம் மற்றும் மின்வாரிய ஊழியர்கள் குடியிருப்பு பகுதி உள்ளது. இந்த பகுதியை சுற்றி ஏராளமான தேயிலை தோட்டங்கள் மற்றும் வனப்பகுதி உள்ளன. இதனால் அங்கிருந்து காட்டு யானை, கரடி, சிறுத்தை உள்ளிட்ட வனவிலங்குகள் மின் வாரிய பகுதிக்குள் நுழைந்து வருகின்றன.

இந்தநிலையில் சமீபத்தில் இரவு நேரத்தில் புலி ஒன்று மின்வாரிய பகுதிக்கு வந்தது. பின்னர் அங்கிருந்து குந்தா சாலையை கடக்க முயன்றது. அப்போது அந்த வழியாக வந்த வாகனத்தை கண்ட புலி, வாகனத்தின் முகப்பு விளக்கின் வெளிச்சத்தை பார்த்தவுடன் அசராமல் நின்றது. சிறிது நேரம் நின்ற புலி பின்னர் சாலைக்கு வந்து வனப்பகுதிக்குள் செல்ல முயற்சி செய்தது.



அங்கு ஏற முடியாததால் மீண்டும் சாலையில் நடந்து கொண்டை ஊசி வளைவை கடந்து, பின்னர் வனப்பகுதிக்குள் சென்று மறைந்தது. புலி நடமாடிய பகுதி பொதுமக்கள் வசிக்கும் பகுதியில் இருந்து சில கிலோ மீட்டர் தூரம் தான் உள்ளது.

மேலும் அந்த சாலை 24 மணி நேரமும் வாகன போக்குவரத்து இருக்கக்கூடிய சாலையாகும். சாலையில் புலி உலா வந்த வீடியோ காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

புலி நடமாட்டத்தால் குந்தா மின்வாரிய பகுதியில் உள்ள பொதுமக்கள் அச்சமடைந்துஉள்ளனர். மேலும் புலி நடமாட்டம் காரணமாகபொதுமக்கள், வாகன ஓட்டிகள் கவனமாக செல்ல வேண்டும் என வனத்துறையினர் அறிவுறுத்தி உள்ளனர்.

# மதுரை விமான நிலையம் தரம் உயர்வு: கூடுதல் சேவை கிடைக்க வாய்ப்பு

மதுரை, ஜன.23

மதுரை விமான நிலையத்தில் இருந்து சென்னை, பெங்களூரு, ஐதராபாத், டெல்லி, மும்பை உள்ளிட்ட உள்நாட்டு நகரங்களுக்கும், துபாய், இலங்கை, சிங்கப்பூர் உள்ளிட்ட வெளிநாடுகளுக்கும் விமானங்கள் இயக்கப்பட்டு வருகின்றன. தற்போது மதுரையில் இருந்து சென்னை வழியாக மலேசியாவுக்கு இரவு நேர விமான சேவையும் தொடங்கப்பட்டுள்ளது. இதனால், மதுரை விமான நிலையத்தை பயன்படுத்தும் பயணிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது.




இந்தநிலையில், பயணிகளின் வருகையை அடிப்படையாக கொண்டு, மதுரை உள்ளிட்ட 6 விமான நிலையங்களின் தரம் உயர்த்தப்பட்டுள்ளதாக மத்திய சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம் அறிவித்துள்ளது. அதன்படி, மதுரை, அகர்தலா, போபால், சூரத், உதய்பூர், விஜயவாடா ஆகிய விமான நிலையங்கள் ஏ.பி.டி. மூன்றாம் தர நிலையிலிருந்து, 2ம் தர நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளன.

இதுகுறித்து விமான நிலைய அதிகாரிகள் கூறுகையில், அகில இந்திய அளவில், விமான நிலையங்களில் உள்ள பயணிகளின் வருகை, புறப்பாடு மற்றும் அதிகரிக்கும் விமான சேவை, பயணிகளின் உடைமைகளை சோதனையிடும் மையம் உள்ளிட்டவைகளை அடிப்படையாக கொண்டு, விமான நிலையங்களில் தரம் உயர்த்தப்படுகிறது.

அதன் அடிப்படையில், தற்போது மதுரை விமான நிலையம் 3ம் தரநிலையில் இருந்து 2ம் தரநிலைக்கு உயர்ந்துள்ளது. இதன் மூலம், மதுரை விமான நிலையத்தில் பயணிகளுக்கான வசதிகள் மேம்படுத்தப்படும். கூடுதலாக விமான சேவைகள், சோதனை மையம், பயணச்சீட்டு மையம், அலுவலர்களின் எண்ணிக்கை உள்ளிட்டவை அதிகரிக்கப்படும் என தெரிவித்தனர்.

# மதுரை அருகே லாரி மீது கார் மோதி விபத்து: ஒருவர் பலி, 5 பேர் படுகாயம்



மேலூர், ஜன.23

சென்னையை சேர்ந்தவர் தொழிலதிபர் முத்துக்குமார். இவர் தனது மகன், மனைவி மற்றும் உறவினர்கள் 5 பேருடன் தூத்துக்குடி அருகேயுள்ள முருகன்காடு கிராமத்தில் நடைபெறும் கோவில் திருவிழாவில் கலந்துகொள்வதற்காக நேற்று இரவு காரில் புறப்பட்டார்.

காரை சென்னையை சேர்ந்த ராமஜெயம் என்பவர் ஓட்டி வந்தார். அவர்கள் இன்று அதிகாலை சுமார் 5 மணியளவில் மதுரை மாவட்டம் மேலூரை அடுத்த கருங்காலக்குடி நான்கு வழிச்சாலையில் வந்து கொண்டிருந்தனர். அப்போது முன்னால் சென்ற லாரியை கார் டிரைவர் ராமஜெயம் முந்திச்செல்ல முயன்றார்.

அப்போது எதிர்பாராத விதமாக லாரியின் பின்பகுதியில் மின்னல் வேகத்தில் சென்ற கார் மோதியது. இதில் காரின் முன்பகுதி அடையாளம் தெரியாத அளவுக்கு உருக்குலைந்தது.

மேலும் இடதுபுறம் முன் இருக்கையில் அமர்ந்து வந்த முத்துக்குமாரின் மகன் பரத் பிரசன்னா (வயது 18) இடி பாடுகளுக்குள் சிக்கி காருக்கு உள்ளேயே பிணமானார்.

மேலும் பின்புறத்தில் அமர்ந்து வந்த முத்துக்குமார், அவரது மனைவி, உறவினர்கள், டிரைவர் உள்பட 5 பேர் பலத்த காயம் அடைந்தனர். விபத்தை பார்த்த அந்த வழியாக வந்தவர்கள் உடனடியாக 108 ஆம்புலன்ஸ் வாகனத்திற்கு தகவல் தெரிவித்தனர்.

மேலும் கருங்காலக்குடி பகுதியை சேர்ந்தவர்கள் விரைந்து வந்து படுகாயங்களுடன் உயிருக்கு போராடியவர்களை மீட்டு மதுரை, மேலூர் அரசு ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பி வைத்தனர்.

அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் விபத்தில் பலியான பரத் பிரசன்னா உடல் பிரேத பரிசோதனைக்காக மேலூர் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. விபத்து குறித்து கொட்டாம்பட்டி போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெயந்தி மற்றும் போலீசார் விபத்து நடந்த பகுதிக்கு விரைந்து சென்று மீட்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். மேலும் இதுதொடர்பாக வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# ஈரோடு: தண்டவாளத்தை கடக்க முயன்றபோது ரெயில் மோதி தொழிலாளி பலி

ஈரோடு, ஜன.24


கர்நாடக மாநிலம் பெங்களூரு ஓங்காலிபுரத்தை சேர்ந்தவர் மூர்த்தி (வயது 56). கூலித்தொழிலாளி. இவர் பொங்கல் பண்டிகை கொண்டாடுவதற்காக ஈரோடு கொல்லம்பாளையம் பகுதியில் உள்ள அவரது அக்காள் லட்சுமியின் வீட்டுக்கு வந்தார். இவர் பாசூருக்கும், ஊஞ்சலூருக்கும் இடைப்பட்ட ரெயில்வே தண்டவாளத்தை கடக்க முயன்றார்.

அப்போது அந்த வழியாக வந்த ஈரோடுசெங்கோட்டை பயணிகள் ரெயிலில் அடிபட்டு மூர்த்தியின் தலை துண்டாகி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இதுகுறித்த தகவல் கிடைத்ததும், ஈரோடு ரெயில்வே போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மூர்த்தியின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக பெருந்துறை அரசு மருத்துவ கல்லூரி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். இதுதொடர்பாக ஈரோடு ரெயில்வே போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# வெல்டிங் பட்டறை உரிமையாளர் கந்துவட்டி கொடுமையால் தற்கொலை போலீசார் கைப்பற்றிய கடிதத்தில் பரபரப்பு தகவல்

ராசிபுரம், ஜன.23

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் அருகே கட்டனாச்சம்பட்டி அம்மன் நகர் பகுதியை சேர்ந்தவர் சக்தி என்கிற செல்வகுமார் (வயது 33). கட்டனாச்சம்பட்டி பெட்ரோல் பங்க் எதிரில் வெல்டிங் பட்டறை வைத்து நடத்தி வந்தார்.





இவர் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு சவுமியா (28) என்பவரை காதலித்து திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு சஞ்சனா என்கிற திவ்யா (8), 6 மாத ஹரிசிதா பெண்குழந்தையும் உள்ளனர்.

இவர்கள் ராசிபுரம் டவுன் ஆத்தூர் சாலையில் உள்ள காமாட்சி அம்மன் கோவில் அருகில் குடும்பத்துடன் வசித்து வந்தனர். நேற்று மதியம் வெல்டிங் பட்டறையை மூடிவிட்டு செல்வகுமார் தனது பெற்றோர் வசிக்கும் கட்டனாச்சம்பட்டியில் உள்ள வீட்டுக்கு சென்றார்.

பின்னர் தனது தந்தை விஜயகுமாரிடம் ரூ.100 கொடுத்து எனக்கு சாப்பாடு வாங்கி வா என்றும், வீட்டை வெளியே பூட்டி விட்டு செல்லுங்கள் என்றும் கூறியுள்ளார். சாப்பாடு வாங்கிக்கொண்டு விஜயகுமார் வீட்டை திறந்து உள்ளே சென்றார். அப்போது வீட்டின் விட்டத்தில் சேலையால் மகன் செல்வகுமார் தூக்குப்போட்டு பிணமாக தொங்கிக்கொண்டிருந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தார். இதுகுறித்து அவர் ராசிபுரம் போலீசாருக்கு தகவல் தெரிவித்தார்.

போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து செல்வகுமார் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக ராசிபுரம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மேலும் செல்வகுமார் தற்கொலை செய்து கொள்வதற்கு முன்பு உருக்கமான கடிதம் ஒன்றை எழுதி வைத்திருந்தார். அந்த கடிதத்தை போலீசார் கைப்பற்றி தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த உருக்கமான கடிதத்தில் மனைவி சவுமியாவுக்கு செல்வகுமார் எழுதியிருப்பதாவது:

நான் சின்ன வயசுலா இருந்து ரொம்ப கஷ்டபட்டேன். ரொம்ப கஷ்டமா இருக்கு. வேலை செய்த யாரும் காசு சரியா தரல.

2 பிள்ளைங்க நல்லா பாத்துகோ. அவங்கள அடிக்காதா, எல்லா மாறிடும்.

ஒரு வாரமா தூங்கல. வி.நகரை சேர்ந்த வட்டிக்கு பணம் கொடுப்பவரிடம் ரூ.3 லட்சம் கடன் வாங்கினேன். அதற்கு என்னிடம் காசோலை வாங்கி விட்டு என்னை ரொம்ப பிளாக் மெயில் பண்ணிட்டாங்க. அவர் 10 நாள் வட்டி கொடு என கேட்டு என்னை ரொம்ப டார்ச்சர் பண்ணிட்டான். நான் எவ்ளோ பணம் தர முடியும். என்னோட வாழ்க்கை முடிஞ்சு போச்சு.

நான், ஒரு சிலரிடம் சீட்டு பணம் போட்டேன். அந்த பணமும் சரியாக கிடைக்கல. என் வாழ்க்கையிலா சவுமியா உனக்கு நான் எதுவும் செய்ல. பாப்பா 2 பேரையும் நல்லா பாத்துக்கோ. அழ கூடாது.

வட்டி கட்ட ஒரு வாரம் தூங்கல. ரொம்ப வட்டி கட்டிட்டேன். வட்டி கொடுத்த விபரம் ஜிபே, போன் பே ஹிஸ்ட்ரில பாருங்க. எவ்வளவு காசு கொடுத்து இருக்கேன் தெரியும்.

வி. நகரை சேர்ந்தவர் மட்டும் எல்லா காசும் நேர்ல வாங்கிட்டான். அவன் தான் என் சாவுக்கு காரணம். அவன் கிட்ட தான் என் காசு போச்சு.

என் குடும்பத்த காப்பாத்துங்க... முரளி, விக்னேஷ் பிளிஸ் எனக்காக காப்பாத்துங்க. சாரிடா உங்கள விட்டு போறேன்.

நான்இந்த முடிவு எடுக்க கூடாது. எனக்கு தெரியும். வாங்கிய காசுக்கு மேல வட்டி கொடுத்துட்டேன். என் குடும்பத்துக்கு எந்த பிரச்சினையும் வர கூடாதுனு காவல் துறை கிட்ட கேட்டுக்கிறேன.

பாப்பா அழதே, அப்பா உன்கூட தான் இருக்கேன். ஐ லவ் யூ சவுமியா, திவ்யா, ஹரிசிதா.

இவ்வாறு அவர் எழுதியிருந்தார்.

மேலும் தனக்கு வர வேண்டிய பணம் குறித்த பட்டியலையும் எழுதியிருந்தார்.

இந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# போலீஸ் நிலையம் முன் தீக்குளித்த தொழிலாளி பலி

சென்னை, ஜன.23

சென்னை புளியந்தோப்பு திரு.வி.க.நகர் 7வது தெருவை சேர்ந்த ராஜன் (வயது 42). இவர் நேற்று முன்தினம் இரவு ஆர்.கே.நகர் போலீஸ் நிலையத்திற்கு புகார் கொடுக்க வந்த நிலையில், போலீசார் தனது புகாரை ஏற்றுக் கொள்ளவில்லை என்றும், தன்னை அடித்து துன்புறுத்துவதாகவும் கூறி போலீஸ் நிலையம் முன்பு பெட்ரோல் ஊற்றி உடலில் தீ வைத்துக்கொண்டார். அதில் பலத்த தீக்காயம் அடைந்த அவர், கீழ்ப்பாக்கம் அரசு ஆஸ்பத்திரியில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

இதுகுறித்து போலீசார் நடத்திய விசாரணையில், தீக்குளித்த ராஜனுக்கு திருமணமாகி 2 குழந்தைகள் உள்ள நிலையில், அவர் கொருக்குப்பேட்டை கருமாரியம்மன் நகரில் சொந்தமாக இரும்பு பட்டறை நடத்தி வந்தது தெரியவந்தது. தற்போது தொழிலில் நஷ்டம் ஏற்பட்டதால் அங்குள்ள கம்பெனியில் கூலி வேலை செய்து வந்த நிலையில், அங்கு பணிபுரிந்து வரும் மாதவன் என்பவருடன் தகராறு ஏற்பட்டுள்ளது. இதைத்தொடர்ந்து, மாதவன் மற்றும் அவரது நண்பர் அருண்குமார் ஆகியோர் சேர்ந்து ராஜனை தாக்கியதாக கூறப்படுகிறது

இதுதொடர்பாக ஆர்.கே.நகர் போலீஸ் நிலையத்தில், புகார் கொடுக்க ராஜன் வந்த நிலையில், அங்கிருந்த போலீசார் நடந்தவற்றை புகாராக எழுதிக்கொடுக்குமாறு கூறி திருப்பி அனுப்பி வைத்ததாக கூறப்படுகிறது.

இதனால் மன வேதனையடைந்த ராஜன் பெட்ரோல் ஊற்றி தீ வைத்துக் கொண்டதாக போலீசார் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து போலீசார் வழக்குப்பதிவு செய்து தொழிலாளி ராஜனை தாக்கியதாக அளித்த புகாரின் பேரில், கொருக்குப்பேட்டை ரெயில்வே காலனி சி.பி.ரோட்டை சேர்ந்த அருண்குமார் (26) என்பவரை கைது செய்து நடவடிககை எடுத்தனர். தலைமறைவான மாதவனை போலீசார் தேடி வருகின்றனர்.

இதையடுத்து போலீஸ் நிலையம் முன்பு தீக்குளித்து தற்கொலைக்கு முயன்ற ராஜன் ஜார்ஜ் டவுன் 15வது நீதிமன்ற நடுவர் பிரான்சிஸ் சாமுவேல் ராஜனிடம் மரண வாக்குமூலம் அளித்தார். இந்த நிலையில், ராஜன் நேற்று மாலை கீழ்ப்பாக்கம் அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார்.

# மோட்டார் சைக்கிள் சக்கரத்தில் துப்பட்டா சிக்கி பெண் பலி

விழுப்புரம், ஜன.23

வேலூர் மாவட்டம் கண்ணமங்கலத்தை சேர்ந்தவர் தஸ்தகீர் மகன் ஜம்சித் (வயது 36). இவரது மனைவி தாஹீராபானு (33). நேற்று முன்தினம் இவர்கள் திண்டிவனத்தில் நடந்த உறவினர் வீட்டு திருமணத்தில் கலந்து கொண்டனர். பின்னர் மதியம் அங்கிருந்து சொந்த ஊருக்கு மோட்டார் சைக்கிளில் திரும்பி சென்று கொண்டிருந்தனர்.

செஞ்சி அருகே உள்ள காந்திநகர் பகுதியில் வந்த போது, பின்னால் அமர்ந்திருந்த தாஹிரா பானுவின் துப்பட்டா, மோட்டார் சைக்கிள்சக்கரத்தில் சிக்கியது. இதனால், அவர் தவறி கீழே விழுந்தார். இதில் தலையில் பலத்த காயமடைந்த தாஹிரா பானுவை அங்கிருந்தவர்கள் மீட்டு சிகிச்சைக்காக செஞ்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது.

பின்னர் அவர் மேல் சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு அவருக்கு டாக்டர்கள் தீவிரசிகிச்சை அளித்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி நேற்று காலை அவர் பரிதாபமாக இறந்து போனார். இது குறித்த புகாரின் பேரில் செஞ்சி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள். இந்த சம்பவம் அவரது குடும்பத்தினரிடையே சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# கோரிக்கைகளை வலியுறுத்தி மாற்றுத்திறனாளிகள் மறியல் போராட்டம்



சென்னை, ஜன.23

தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத் திறனாளிகள் மற்றும் பாதுகாப்போர் உரிமைகளுக்கான சங்கம் சார்பில் சிறை நிரப்பும் போராட்டம் நடந்தது.

மாற்றுத் திறனாளிகளுக்கு உதவித்தொகை உயர்த்தி வழங்க வேண்டும், ஏற்கனவே வழங்கப்பட்டு வந்த உதவித் தொகை நிறுத்தப்பட்டதை கண்டித்து சென்னையில் சேத்துப்பட்டு சிக்னல் அருகில் மாவட்ட தலைவர் சுரேந்திரன், மாவட்ட செயலாளர் எஸ்.மனோன்மணி ஆகியோர் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடந்தது.

கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர். திடீரென சாலையில் அமர்ந்து முழக்கமிட்டனர். அவர்களை போலீசார் அங்கிருந்து அப்புறப்படுத்த முயற்சி செய்தனர். ஆனால் அவர்கள் ஒத்துழைப்பு தரவில்லை.

தொடர்ந்து சாலையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. அந்த வழியாக வந்த வாகனங்கள் சிறிது நேரம் நின்றதால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

இதையடுத்து போலீசார் மறியலில் ஈடுபட்ட 38 மாற்றுத் திறனாளிகளை குண்டு கட்டாக தூக்கி சென்று வேனில் ஏற்றி கைது செய்தனர்.

இதேபோல வில்லிவாக்கம், அண்ணா நகர், துறைமுகம், ஆயிரம் விளக்கு பகுதியிலும் மறியல் நடந்தது.

திருவொற்றியூர் டி.எச். சாலையில் உள்ள தாசில்தார் அலுவலகம் முன்பு மாநில பொதுச் செயலாளர் ஜான்சி ராணி தலைமையில் போராட்டம் நடைபெற்றது. இதில் ஆர்.கே. நகர், ராயபுரம், திருவொற்றியூர், மணலி, எண்ணூர் பகுதியைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் பங்கேற்றனர்.

அவர்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி கையில் பதாகைகளை ஏந்தி கோஷமிட்டபடி மறியலில் ஈடுபட்டனர். அவர்கள் அனைவரையும் போலீசார் கைது செய்தனர்.

# டங்ஸ்டன் திட்டத்தை ரத்து செய்யக்கோரி டெல்லி சென்ற விவசாயிகள்



மதுரை, ஜன.23

மதுரை மாவட்டம் மேலூர் அருகே உள்ள அரிட்டாப்பட்டி மற்றும் அதனை சுற்றி உள்ள கிராமங்களில் டங்ஸ்டன் சுரங்கம் அமைக்க மத்திய அரசு ஏல அறிவிப்பு வெளியிட்டது.

இதற்கு அந்த பகுதி மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். பல்லுயிர் தளமான அரிட்டாப்பட்டி பகுதியில் டங்ஸ்டன் சுரங்கம் அமைத்தால் சுற்றுச்சூழல், விவசாயம் பாதிக்கும் என கூறி கிராம மக்கள் தொடர் போராட்டங்களை நடத்தினர்.

மேலும் விவசாயிகள், வணிகர் சங்கத்தினர் கடையடைப்பு போராட்டம் நடத்திதங்களதுஎதிர்ப்பை பதிவு செய்தனர். இந்த மாத தொடக்கத்தில் டங்ஸ்டன் திட்டத்திற்கு எதிராக மேலூரில் இருந்து லட்சக்கணக்கானோர் மதுரைக்கு பேரணியாக புறப்பட்டு வந்து ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

தமிழக அரசும் இந்த திட்டத்திற்கு எதிராக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பியது. இதற்கிடையில் மத்திய அரசு டங்ஸ்டன் திட்டத்தை முழுவதுமாக ரத்து செய்ய வேண்டும் என கூறி தற்போது வரை அரிட்டாப்பட்டி மற்றும் சுற்றுவட்டார கிராம மக்கள் தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் டங்ஸ்டன் விவகாரம் தொடர்பாக தங்களது கோரிக்கைகளைமத்தியசுரங்கத்துறை அமைச்சர் கிசான் ரெட்டியை சந்தித்து மனு அளிக்க முடிவு செய்யப்பட்டது. அதன்படி அந்த பகுதியை சேர்ந்த விவசாய சங்க பிரமுகர்கள் பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை தலைமையில் புறப்பட்டனர்.

இந்த குழுவில் ஒருங்கிணைப்பாளர்களாக பா.ஜனதாவை சேர்ந்த மகா சுசீந்திரன், பேராசிரியர் ராம சீனிவாசன், ராஜசிம்மன், பாலமுருகன் ஆகியோர் செயல்பட்டனர்.

இவர்களுடன் கிராம விவசாயிகள் மகாமுனி அம்பலம், ஆனந்த், போஸ், முருகேசன், முத்துவீரனன், சாமிக்கண்ணு, ஆனந்த் ஆகியோர் டெல்லி புறப்பட்டனர்.

# 1,330 திருக்குறள் வரிகளால் திருவள்ளுவரின் படத்தை வரைந்த அரசுப் பள்ளி மாணவி



தென்காசி, ஜன.23

தென்காசி மாவட்டம் கீழப்பாவூர் ஒன்றியம் அரியப்பபுரம், கணக்க நாடார் பட்டி கிராமத்தை சேர்ந்தவர்கள்சுடலைக்கனிசத்யா தம்பதியர். சுடலைக்கனி பாவூர்சத்திரத்தில் கார்கள் பழுது பார்க்கும் ஒர்க்ஷாப் நடத்தி வருகிறார்.

இவர்களுக்கு நந்திதா என்ற மகளும், அத்திரி சித்தாத் என்ற மகனும் உள்ளனர். நந்திதா பாவூர்சத்திரத்தில் உள்ள அவ்வையார் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பிளஸ்1 படித்து வருகிறார்.

3ம் வகுப்பு படிக்கும் போதில் இருந்தே ஓவியத்தில் ஆர்வம் கொண்ட இவர் ஓவிய போட்டிகளில் மாவட்ட அளவிலான பல்வேறு போட்டிகளிலும் கலந்து கொண்டு சாதனைகள் படைத்துள்ளதோடு எண்ணற்ற சான்றிதழ்களையும் வாங்கி குவித்துள்ளார்.

இவர் 1,330 திருக்குறள் வரிகளால் பென்சில் மூலம் திருவள்ளுவரின் உருவத்தை தத்ரூபமாக வரைந்து அதற்கு பார்டராக 133 அதிகாரங்களையும் எழுதி தான் படிக்கும் பள்ளியின் தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்களிடம் காண்பித்து பாராட்டினை பெற்றார்.

மேலும் சட்ட மேதை அம்பேத்கார் படத்தினை அவர் இயற்றிய சட்டங்களை கொண்டு பென்சிலால் புதிய முயற்சியாக வரைந்து கொண்டிருக்கிறார்.

மாவட்ட அளவிலான ஓவியப் போட்டிகளில் சாதனை படைத்தது மட்டுமல்லாது மாநில அளவிலான போட்டிகளிலும் வென்று சாதனைபடைக்க வேண்டும் என்றும் மாணவி நந்திதா கூறினார்.

# பெரியபாளையம் அருகே சிறுவனை ஆசை வார்த்தை கூறி வெளியூருக்கு அழைத்துச் சென்று பாலியல் வன்கொடுமை செய்த பெண் கைது

பெரியபாளையம், ஜன.23

பெரியபாளையம் அருகே சிறுவனை ஆசை வார்த்தை கூறி வெளியூருக்கு அழைத்துச் சென்று பாலியல் வன்கொடுமை செய்த 24 வயது பெண் போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்து போலீசார் சிறையில் அடைத்தனர். திருவள்ளூர் மாவட்டம் பெரியபாளையம் அருகே 16 வயது சிறுவன் அரசுப் பள்ளியில் 11ஆம் வகுப்பு படித்து வருகிறார். இவரது வீட்டின் அருகே வசித்து வரம் வினோதினி (24) என் ப வ ரு க் கு திருமணமாகி 2 குழந்தைகள் உள்ளன. இந்நிலையில் வினோதினி 11ஆம் வகுப்பு மாணவனை ஆசை வார்த்தை கூறி காதலித்து கடந்த டிசம்பர் மாதம் வீட்டை விட்டு வெளியூருக்கு அழைத்து சென்றுள்ளார். சிறுவனை காணாத பெற்றோர் இது தொடர்பாக பெரியபாளையம் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர்.



சிறுவன் காணாமல் போன புகார் குறித்து வழக்கு பதிவு செய்து பெரியபாளையம் போலீசார் காணாமல் போன பிரிவில் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர். விசாரணையில் சிறுவனை அருகில் வசிக்கும் பெண் ஆசை வார்த்தை கூறி அழைத்துச் சென்றது தெரிய வந்தது. இதனையடுத்து அவர் பதுங்கி இருந்த ஊருக்கு சென்று சிறுவனை மீட்டு இளம் பெண்ணை கைது செய்தனர். தொடர்ந்து சிறுவனை ஆசைவார்த்தைகூறி பாலியல் வன்கொடுமை செய்த வி னோ தி னி யை போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்து திருவள்ளூர் மகிலா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி புழல் சிறையில் அடைத்தனர்.

# குவைத்தில் நெருப்பு மூட்டி குளிர் காய்ந்ததில் கடலூர் டிரைவர்கள் பரிதாப பலி



கடலூர், ஜன.23

குவைத் நாட்டில் நெருப்பு மூட்டி குளிர்காய்ந்ததில் கடலூரை சேர்ந்த 2 டிரைவர்கள் உட்பட 3 பேர் மூச்சுத்திணறி பரிதாபமாக இறந்தனர். கடலூர் மாவட்டம் மங்கலம்பேட்டையைசேர்ந்தவர்முஹம்மது ஜுனைத் (45), முஹம்மது யாசின்(30). இருவரும் குவைத் நாட்டில் டிரைவராக இருந்தனர். இதேபோல் திருவண்ணாமலையை சேர்ந்த கவுஸ் பாஷா மற்றும் உத்தரப் பிரதேசம் மாநிலத்தை சேர்ந்த வாலிபர் ஒருவர் என 4 பேரும் சேர்ந்து, குவைத் நாட்டில் வேலை நிமித்தமாக பாலைவனப் பகுதியில் கடந்த 18ம் தேதி ஒரு தற்காலிக குடியிருப்பில் தங்கியிருந்தனர்.

அங்கு, தற்போது கடுமையான குளிர்நிலவி வருவதால், குளிர் காய்வதற்காக அடுப்புக்கரியை பயன்படுத்தி நெருப்பு மூட்டி விட்டு, கதவுகளை அடைத்து விட்டு தூங்கியதாக கூறப்படுகிறது. அப்போது, மூச்சுத் திணறல் ஏற்பட்டு முஹம்மது ஜுனைது, முஹம்மது யாசின் மற்றும் உத்தரப்பிரதேசத்தை சேர்ந்த வாலிபர் என மூவரும் தூக்கத்திலேயே இறந்து விட்டனர். இவர்களுடன் தங்கி இருந்த திருவண்ணாமலையைச் சேர்ந்த கவுஸ் பாஷா மட்டும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்.

# மாணவிக்கு பாலியல் தொல்லை: அரசு பள்ளி ஆசிரியர் கைது

திருப்பூர்,ஜன.24

திருப்பூர் மாவட்டம் காங்கயம் அடுத்த ஊதியூரில் அரசு உயர்நிலைப் பள்ளி உள்ளது. இந்த பள்ளியில் அந்த பகுதியை சுற்றிஉள்ளகிராமங்களைச் சேர்ந்த மாணவமாணவிகள் படித்து வருகிறார்கள். இந்த பள்ளியில் அறிவியல் பாட ஆசிரியராக சிவக்குமார் (வயது 54) என்பவர் பணியாற்றி வருகிறார்.

இவர் அந்தப் பள்ளியில் 6ம் வகுப்பு படிக்கும் மாணவி ஒருவரிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது.

இதுகுறித்து அந்த மாணவி தனது பெற்றோரிடம் தெரிவித்தார்.

இதனால் அதிர்ச்சியடைந்த மாணவியின் பெற்றோர் காங்கயம் அனைத்து மகளிர் போலீசில் ஆசிரியர் மீது புகார் செய்தனர். அதன்பேரில் போலீசார் பள்ளிக்கு வந்து விசாரணை நடத்தினர்.

விசாரணைக்கு பின்னர் ஆசிரியர் சிவக்குமாரை போக்சோ வழக்கில் கைது செய்தனர்.பின்னர்அவரை கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

# பாதசாரிகளின் பாதுகாப்பை மேம்படுத்தும் வகையில் நடைபாதைகளில் தீவிர தூய்மை பணி: மாநகராட்சி நடவடிக்கை



சென்னை, ஜன.23

சென்னையில் பாதசாரிகளின் பாதுகாப்பை மேம்படுத்தும் வகையில் பேருந்து சாலைகளின்நடைபாதைகளில் உள்ள கழிவுகளை அகற்றி சுத்தம் செய்யும் பணியை மாநகராட்சி தொடங்கியுள்ளது. சென்னை மாநகராட்சிக் குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு, நாள்தோறும் சராசரியாக 5,900 மெட்ரிக் டன் திடக்கழிவு அகற்றப்பட்டு வருகிறது. மேலும், தீவிர தூய்மை பணியின் கீழ், பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் குப்பை, கட்டிட கழிவுகள், சாலையோரங்கள் மற்றும் சாலை மையத் தடுப்புகளில் உள்ள மண் மற்றும் குப்பையை அகற்றுதல், நீர்நிலைகள் மற்றும் கால்வாய்களில் வண்டல்கள் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

இதேபோல், பூங்காக்களில் தூய்மை பணிகள், விழும் நிலையில் உள்ள மரங்களின் கிளைகளை அகற்றுதல், பெருமளவு குப்பை சேகரமாகும் இடங்களில் வைக்கப்பட்டுள்ள குப்பை தொட்டிகளில் உள்ள குப்பையை சுத்தம் செய்து, அவ்விடங்களில் சுகாதார பணிகள் மேற்கொள்ளுதல், சேதமடைந்த குப்பை தொட்டிகளுக்கு மாற்றாக புதிய குப்பை தொட்டிகள் வைத்தல் உள்ளிட்ட தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, மாநகராட்சிக்குட்பட்ட 15 மண்டலங்களிலும் மக்களின் சுகாதாரத்தை பேணுகின்ற வகையிலும்,தூய்மையான நகரமாக விளங்குகின்ற வகையிலும், பயணிகளின் வசதிக்காகவும் அமைக்கப்பட்ட அனைத்து பேருந்து நிறுத்தங்களிலும் கடந்த ஆகஸ்ட் 21ம் தேதி முதற்கட்டமாக தீவிர தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு, குப்பை, கட்டிடக் கழிவுகள், சுவரொட்டிகள் மற்றும் விளம்பர பதாகைகள் அகற்றுதல், பயணியர் இருக்கைகளை சுத்தம் செய்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன் தொடர்ச்சியாக, 2ம் கட்டமாக 15 மண்டலங்களிலும் உள்ள 1,363 பேருந்துநிறுத்தங்களிலும், கடந்த மாத இறுதியில் தீவிர தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இந்த பணிகளில் குப்பை மற்றும் கட்டிடக் கழிவுகளை அகற்றுதல், சுவரொட்டிகள் மற்றும் அனுமதியின்றி வைக்கப்பட்ட விளம்பரப் பதாகைகள் அகற்றுதல், இருக்கைகள் மற்றும் பேருந்து நிறுத்தத்தின் முன்புறம் மற்றும் பின்புறத்தை சுத்தம் செய்து, பேருந்து நிழற்குடைகள் முழுவதையும் தண்ணீர் பயன்படுத்தி சுத்தம் செய்தல், நிழற்குடைகளில் உள்ள பழுதுகளை அடையாளம் கண்டு, அவற்றின் அளவீடுகளை கணக்கெடுத்து மதிப்பீடு செய்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில் சென்னையின் முக்கிய சாலைகளில் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள நடைபாதைகளை சீரமைக்க மாநகராட்சி முடிவு செய்துள்ளது.

சென்னையில் உள்ள பெரும்பாலான நடைபாதைகளில் கேட்பாரற்ற வாகனங்கள், தள்ளுவண்டி கடைகள், ஆட்டோ ஸ்டாண்டு, தனியார் வாகனங்கள் நிறுத்துவது, ஆக்கிரமிப்பு கடைகள், குப்பை குவியலாக காட்சியளிப்பது என முறையான பராமரிப்பின்றி காணப்படுவதால், பாதசாரிகள் சாலையில் நடந்து செல்லும் நிலை உள்ளது. இதனால், போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுவதுடன், பொதுமக்கள் அவ்வப்போது விபத்தில் சிக்கும் நிலை உள்ளது. எனவே, முக்கிய சாலைகளில் ஏற்படும் நெரிசலை குறைக்கவும், பாதசாரிகளின் பாதுகாப்பை மேம்படுத்தும் நடைபாதைகளில் 15 நாட்களுக்கும் மேலாக கைவிடப்பட்ட வாகனங்கள் பறிமுதல் செய்யப்படும், என மாநகராட்சி அறிவித்துள்ளது. அதன்படி, 15 நாட்களாக ஒரு வாகனம் பயன்படுத்தப்படாமல் கைவிடப்பட்டு இருந்தால், அந்த வாகனம் தொடர்பாக உரிமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டு, உரிமை கோரப்படாதவாகனங்கள்பறிமுதல் செய்யப்பட்டு ஏலம் விடப்படும்.

கடந்த வருடம் ஜூலை முதல், சென்னை மாநகராட்சி 1,774 வாகனங்களை பறிமுதல் செய்துள்ளது. 729 வாகனங்கள் மீட்கப்பட்டது. மீதமுள்ள 1,045 வாகனங்கள் ஏலத்திற்கு தயாராகி உள்ளது. இந்நிலையில், சென்னையின் பேருந்து சாலைகள் முழுவதும் உள்ள நடைபாதைகளை பாதசாரிகள் பயன்பாடு மற்றும் பாதுகாப்பிற்கு ஏற்றவகையில் நேற்று முன்தினம் முதல் வரும் 27ம்தேதி வரை இரவு நேரங்களில் தீவிரத் தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த பணியின் போது, நடைபாதைகளில் உள்ள குப்பை, கட்டிட கழிவுகள், நீண்ட நாட்களாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கைவிடப்பட்ட வாகனங்கள், தேவையற்ற இன்டர்நெட் மற்றும் மின் வயர்களை அகற்றுதல், பாதசாரிகளுக்கு இடையூறாக உள்ள பிற பொருட்களை அகற்றுதல், சாலையோர மின்விளக்குகளை மறைக்கும் வகையில் உள்ள மரக்கிளைகளை அகற்றுதல், நடைபாதைகள் சுத்தம் செய்தல் உள்ளிட்ட தூய்மைப் பணி நடவடிக்கைகள் மற்றும் ஆக்கிரமிப்புகளை அகற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

மேலும், இப்பணியில் நடைபாதைகளில் உள்ள சிறுசிறு பழுதுகள் கணக்கீடு செய்யப்பட்டு, மதிப்பீடுகள் தயாரித்து அவற்றை சரிசெய்யும் நடவடிக்கைகளும், சாலையின் சம உயர அளவில் அமைந்துள்ள நடைபாதைகள் கணக்கிடப்பட்டு, பாதசாரிகளின் பாதுகாப்பிற்காக அந்த இடங்களில் ஸ்டெயின்லஸ் ஸ்டீல் கைப்பிடிகள் அமைப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகிறது. இவ்வாறு சென்னை மாநகராட்சி தெரிவித்துள்ளது.

# தெலுங்கில் அறிமுகமாகும் 'காந்தாரா' நடிகை




நடிகர் ரிஷப் செட்டி இயக்கி நடித்திருந்த திரைப்படம் 'காந்தாரா'. கடந்த 2022ம் ஆண்டு வெளியாகி மிகப்பெரிய வெற்றியைப் பெற்ற இப்படம் கர்நாடக மாநிலத்தின் வனப்பகுதியில் வசிக்கும் மக்கள் தெய்வமாக வணங்கும் 'பஞ்சுருளி' என்ற காவல் தெய்வத்தை மையமாக வைத்து உருவாகி இருந்தது. இதில் கதாநாயகியாக சப்தமி கவுடா நடித்திருந்தனர். தற்போது இதன் 2ம் பாகம் உருவாகி வருகிறது. இந்தசூழலில், நடிகை சப்தமி கவுடா நித்தின் நடிக்கும் தம்முடு படத்தின் மூலம் தெலுங்கில் அறிமுகமாக இருக்கிறார். தற்போது இப்படத்தின் கிளைமாக்ஸ் காட்சிகள் படமாக்கப்பட்டுவருகின்றன. இப்படத்தை வேணு ஸ்ரீராம் இயக்குகிறார். ஸ்ரீ வெங்கடேஸ்வரா கிரியேஷன்ஸ் பேனரில் தில் ராஜு தயாரிக்கும் இப்படத்திற்கு காந்தார புகழ் அஜனீஷ் லோக்நாத் இசையமைத்து வருகிறார். இப்படம் விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# சாய்பல்லவி நடிப்பில் அடுத்த மாதம் வெளியாக உள்ள படம் 'தண்டேல்'.



அமரன் படத்தைத்தொடர்ந்து சாய்பல்லவி நடிப்பில் வெளியாக உள்ள படம் 'தண்டேல்'. இதில், நடிகர் நாக சைதன்யா கதாநாயகனாக நடித்துள்ளார். 'கார்த்திகேயா 2' திரைப்படத்தின் மூலம் பிரபலமான சந்து மொண்டேட்டி இப்படத்தை இயக்கியுள்ளார். கீதா ஆர்ட்ஸ் சார்பில் பன்னிவாஸ் தயாரித்திருக்கும் இப்படத்திற்கு தேவி ஸ்ரீ பிரசாத் இசையமைத்துள்ளார். ஸ்ரீகாகுளத்தில் உள்ள மீனவர்களின் உண்மைச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு இப்படம் உருவாகி உள்ளது. இப்படம் அடுத்த மாதம் 7ம் தேதி தமிழ், தெலுங்கு மற்றும் இந்தி ஆகிய மொழிகளில் வெளியாக உள்ளது. ஏற்கனவே இப்படத்தின் 2 பாடல்கள் வெளியாகி வைரலானநிலையில், 3வது பாடலுக்கான அறிவிப்பை படக்குழு வெளியிட்டுள்ளது. அதன்படி,'ஹைலேசோ ஹைலேசா' எனப்பெயரிடப்பட்டுள்ள இப்பாடல் நாளை வெளியாக இருக்கிறது.

# ஓ.டி.டி.யில் வெளியாகும் கங்கனா ரனாவத்தின் 'எமர்ஜென்சி' படம்



முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி, நாடு முழுவதும் அமல்படுத்திய அவசரநிலை பிரகடனத்தை மையமாக வைத்து உருவாகி இருக்கும் படம் 'எமர்ஜென்சி'. இதில், இந்திரா காந்தியாககங்கனாரனாவத்நடித்துள்ளார்.படத்தைஅவரேஇயக்கியும்உள்ளார்.இப்படத்தில் அனுபம் கெர், சதீஷ் கவுசிக், பூமிகா சாவ்லா, ஷ்ரேயாஸ் தல்படே உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

ஜி.வி.பிரகாஷ் இசையமைத்துள்ள இப்படத்தின் திரைக்கதை மற்றும் வசனத்தை ரித்தேஷ் ஷா எழுதியுள்ளார். இப்படம் கடந்த 17ந் தேதி திரையரங்குகளில் வெளியானது. இந்திரா காந்தி கதாபாத்திரத்தில் கங்கனா ரனாவத்தின் நடிப்பு பாராட்டுகளைப் பெற்றுள்ளது.

இந்த நிலையில், எமர்ஜென்சி படத்தின் ஓ.டி.டி உரிமையை நெட்பிளிக்ஸ் நிறுவனம் பெற்றுள்ளது. பொதுவாக பாலிவுட் படங்கள் திரையரங்குகளில் வெளியான எட்டு வாரங்களுக்குப் பிறகு ஓ.டி.டி தளங்களில் வெளியாகும். அதன்படி, எமர்ஜென்சி படம் மார்ச் மாதத்தில் நெட்பிளிக்ஸ் ஓ.டி.டி தளத்தில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# 'காத்து வாக்குல ஒரு காதல்' படத்தின் டிரெய்லர் வெளியீடு

இரண்டு கதாநாயகிக்குள் நடக்கும் உண்மை காதலைப் மையமாகக் கொண்டு, தற்போது சமூக வலைத்தளங்களில் இளம்பெண்ணின் வாழ்க்கை எப்படி சீரழிகிறது என்பதை சுட்டிக்காட்டியுள்ள படமாக உருவாகியுள்ளது "காத்து வாக்குல ஒரு காதல்" திரைப்படம்.

மாஸ் ரவி பூபதி 'காத்து வாக்குல ஒரு காதல்' திரைப்படத்தை எழுதி, இயக்குவது மட்டுமல்லாமல் நாயகனாகவும் நடித்து அசத்தியுள்ளார். இப்படத்தில் லட்சுமி பிரியா மற்றும் மஞ்சுளா என இரண்டு நாயகிகள் நடித்துள்ளனர். இவர்களுடன் சூப்பர் சுப்பராயன், சாய் தீனா, சத்தியா, கல்லூரி வினோத், ஆதித்யா கதிர், தங்கதுரை, பவர் ஸ்டார் சீனிவாசன், கபாலி விஸ்வந்த், மேனக்சன் மீப்பு, மொசக்குட்டி பிரியதர்ஷினி, பிரியங்கா ரோபோ சங்கர் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இப்படத்தை ராஜதுரை ஒளிப்பதிவு செய்ய, ஜி.கே.வி இசையமைத்துள்ளார். 'காத்து வாக்குல ஒரு காதல்' படத்தை சென்னை புரடக்சன்ஸ் தயாரித்துள்ளது. இப்படம் ரசிகர்களுக்கு ஏற்ப காதல், காமெடி, ஆக்சன், திரில்லர், எமோஷனல் என கமர்சியல் திரைப்படமாக உருவாகி வருகிறது. இப்படத்தின் படப்பிடிப்பு சென்னை, பாண்டிச்சேரி, கேரளா போன்ற பல்வேறு பகுதிகளில் படமாக்கி வருகின்றனர்.

இரண்டு கதாநாயகிக்குள் நடக்கும் உண்மை காதலை மையமாகக் கொண்டு இப்படம் உருவாகியுள்ளது. வடசென்னை பின்னணியில், தற்போது இளம் பெண்களின் வாழ்க்கை சமூக வலைதளங்களில் எப்படி சீரழிகிறது என்பதை சுட்டிக்காட்டும் வகையில் இப்படத்தை படமாக்கி இருக்கின்றனர்.

சமீபத்தில் தான் இப்படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டரை படக்குழுவினர் வெளியிட்டனர். இது சமூக வலைதளங்களில் வைரலாவதுடன், ரசிகர்களை கவர்ந்தும் வருகிறது. ஏற்கனவே 'காத்து வாக்குல ரெண்டு' படத்தில் விஜய் சேதுபதி நாயகனாகவும், நயன்தாரா, சமந்தா என இரு நாயகிகள் நடித்து வெளிவந்த படம் ரசிகர்களுக்கு டபுள் ட்ரீட்டாக அமைந்தது நினைவிருக்கலாம். தற்போது அதேபோல் 'காத்து வாக்குல ஒரு காதல்' படத்திலும் காதலை மையமாகக் கொண்டு இரண்டு நாயகிகளும், ஒரு நாயகனும் நடித்துள்ளனர்.

# ஐ.சி.சி. மகளிர் ஒருநாள் தரவரிசை; பேட்டிங் பட்டியலில் ஏற்றம் கண்ட ஸ்மிருதி மந்தனா



சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) மகளிருக்கான ஒருநாள் தரவரிசை பட்டியலை இன்று வெளியிட்டது. அதன்படி பேட்டர்கள் தரவரிசையில் இந்தியாவின் மந்தனா (738 புள்ளி) ஒரு இடம் முன்னேறி 2வது இடத்தை பிடித்துள்ளார். இந்தப்பட்டியலில் தென் ஆப்பிரிக்காவின் லாரா வோல்வார்ட் (773 புள்ளி) முதல் இடத்தில் உள்ளார். இலங்கையின் சமாரி அத்தபத்து (733 புள்ளி) 3வது இடத்திலும், இங்கிலாந்தின் நாட் ஸ்கிவர் பிரண்ட் (725 புள்ளி) 4வது இடத்திலும் உள்ளனர்.

ஒருநாள் பந்துவீச்சாளர்கள் தரவரிசை பட்டியலில் இங்கிலாந்தின் சோபி எக்லெஸ்டோன்(770 புள்ளி) முதல் இடத்திலும், ஆஸ்திரேலியாவின் ஆஷ்லே கார்ட்னெர்(724 புள்ளி) 2வது இடத்திலும், ஆஸ்திரேலியாவின் மேஹன் ஸ்கட் (696 புள்ளி) 3வது இடத்திலும் உள்ளனர். இந்தியாவின் தீப்தி சர்மா(680 புள்ளி) ஒரு இடம் உயர்ந்து 4வது இடத்திற்கு வந்துள்ளார்.

ஒருநாள் ஆல்ரவுண்டர்கள் தரவரிசை பட்டியலில் ஆஸ்திரேலியாவின் ஆஷ்லே கார்ட்னெர் (469 புள்ளி) ஒரு இடம் உயர்ந்து முதல் இடத்திற்கு வந்துள்ளார். தென் ஆப்பிரிக்காவின் மரிசேன் கேப் (444 புள்ளி) 2வது இடத்திலும், வெஸ்ட் இண்டீஸின் ஹேலி மேத்யூஸ் (426 புள்ளி) 3வது இடத்திலும் உள்ளனர்.

# ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ்; அல்காரஸை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார் ஜோகோவிச்



'கிராண்ட்ஸ்லாம்' போட்டிகளில் ஒன்றான ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர் மெல்போர்னில் நடைபெற்று வருகிறது. விறுவிறுப்பான கட்டத்தை எட்டியுள்ள இந்த தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இன்று நடைபெற்ற காலிறுதி ஆட்டம் ஒன்றில் முன்னணி வீரர்களான நோவக் ஜோகோவிச் (செர்பியா) கார்லஸ் அல்காரஸ் (ஸ்பெயின்) மோதினர்.

இந்த ஆட்டத்தின் முதல் செட்டை 6-4 என்ற புள்ளிக்கணக்கில் அல்காரஸ் கைப்பற்றினார். இதையடுத்து தனது அனுபவ ஆட்டத்தை வெளிப்படுத்திய ஜோகோவிச் ஆட்டத்தின் அடுத்த மூன்று செட்களை 6-4, 6-3, 6-4 என்ற புள்ளிக்கணக்கில் கைப்பற்றினார்.

இதன் மூலம் அல்காரஸை வீழ்த்திய ஜோகோவிச் அரையிறுதி சுற்றுக்கு முன்னேறி அசத்தினார். வரும் 24ம் தேதி நடைபெறும் அரையிறுதி ஆட்டத்தில் ஜோகோவிச், ஜெர்மனியின் அலெக்சாண்டர் ஸ்வேரெவ் உடன் மோத உள்ளார்.

# இந்தோனேசியா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன்; சாத்விக்சிராக் ஜோடி 2வது சுற்றுக்கு முன்னேற்றம்



இந்தோனேசிய தலைநகர் ஜகார்தாவில் 'இந்தோனேசியா மாஸ்டர்ஸ்' பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்கியது. இதில் இந்தியாவின் நம்பிக்கை நட்சத்திரங்களான சிந்து, மாளவிகா, பிரணாய், லக்ஷயா சென் உட்பட பலர் பங்கேற்கின்றனர்.

இந்நிலையில், இந்த தொடரில் ஆண்கள் இரட்டையர் பிரிவில் இன்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் ரங்கி ரெட்டி சிராக் செட்டி ஜோடி, சீன தைபேவின் சென் ஸி ரே லின் யூ சீஹ் ஜோடியை எதிர்கொண்டது.

இந்த போட்டியில் தொடக்கம் முதலே அபாரமாக ஆடிய சாத்விக் சாய்ராஜ் ரங்கி ரெட்டி சிராக் செட்டி ஜோடி 2116, 2115 என்ற செட் கணக்கில் சீன தைபேவின் சென் ஸி ரே லின் யூ சீஹ் ஜோடியை வீழ்த்தி 2வது சுற்றுக்கு முன்னேறியது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.